தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தேனி மாவட்டத்தில் மழையளவு குறைவு

தேனி மாவட்டத்தில் கடந்த ஆண்டுகளைவிட தற்போது மழையளவு குறைந்து வருவதால், அணைகளின் நீர்மட்டமும் குறைந்து வருகிறது. கோடை காலத்தில் குடிநீர் மற்றும் பாசனத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு அபாயம் ஏற்பட்டு உள்ளது.

கேரளம் மற்றும் தேனி மாவட்டங்களில் பெய்யும் மழையின் மூலம் முல்லை பெரியாறு, வைகை அணையின் நீர்மட்டம் உயரும். இந்த அணைகளின் மூலம் தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை மாவட்டங்களைச் சேர்ந்த 1.70 லட்சத்துக்கு அதிகமான விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. அதோடு மட்டுமல்லாமல், இம் மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பாலான மக்களின் தாகத்தையும் தீர்த்து வருகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக படிப்படியாக மழை அளவு குறைந்து வருகிறது. இதனால் விவசாய நிலங்களின் பரப்பளவு குறைந்து, பிளாட்டுகள் போடும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், பருவ காலங்களில் மழை பெய்தால் நிலத்தடி நீர்மட்டம் உயரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கடந்த 2 மாதங்களில் கடந்த ஆண்டை விட 30 சதவீதம் பருவமழை குறைந்துள்ளது. பல்வேறு மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

குறிப்பாக, கோவை மற்றும் தேனி மாவட்டங்களில் அதிக அளவு நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வருகிறது. தேனி மாவட்டத்தில் ஏழு வருடங்களுக்கு முன் 1298 மி.மீ. மழை பெய்துள்ளது. ஆனால், படிப்படியாக குறைந்து கடந்த 2013ஆம் ஆண்டு 843 மி.மீ. மழை மட்டுமே பெய்துள்ளது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது. மேலும் புள்ளிவிவரங்களின் படி தமிழகத்தில் அதிகளவு நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வரும் மாவட்டத்தில் முதலிடத்தில் தேனி மாவட்டம்

உள்ளது. இங்கு 14.39 மீட்டர் ஆழத்தில் உள்ளது. இதே நிலை நீடித்தால், தேனி மாவட்டத்தில் தண்ணீருக்கு பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது.

வருசநாடு மலைப்பகுதியில் பெய்யும் மழை நீரே வைகை அணையின் முக்கிய நீ0ர் ஆதாரம். ஆனால் இப் பகுதிகளில் கடந்த 2 ஆண்டுகளாக போதிய மழை பெய்யாததால், மூலவைகை ஆற்றில் நீர் வரத்து கிடையாது. இதனால் வைகை அணை அதன் முழு கொள்ளளவான 71 அடியை கடந்த 2 ஆண்டுகளாக எட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது முல்லை பெரியாறு அணையில் இருந்துவரும் தண்ணீரை வைத்து பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்கு பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், முல்லை பெரியாறு அணையில் நீர் பகுதியில் கடந்த 20 நாள்களுக்கு மேலாக மழை கிடையாது. இதனால் இப் பகுதியில் நீர் வரத்து குறைந்துவிட்டது. இப் பகுதியில் இருந்து வெளியேறும் தண்ணீர் 2 முதல் 40 கன அடி நீர் மட்டுமே வைகை அணையை வந்து அடைகிறது. இந்நிலையில் தற்போது வைகை அணை மற்றும் முல்லை பெரியாறு அணைகளின் நீர்மட்டம் கடந்த 8 ஆண்டுகளை விடவும், குறிப்பாக கடந்த 2 ஆண்டுகளை விட அதிகளவில் தண்ணீர் மட்டம் குறைந்து வருகிறது. இதனால் தற்போது குளிர் காலத்திலேயே தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. இதே நிலை நீடித்தால் கோடை காலத்தில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயமும் உள்ளது.

மேலும் வைகை அணை நீர்ப் பிடிப்பு பகுதியில் வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட மண் மற்றும் மணல் 20 அடி வரை தேங்கியுள்ளது. இதனால் நீர் தேக்கும் அளவு குறைந்து வருகிறது. மேலும் வைகை அணை நீர் தேக்கம் மற்றும் ஆற்றுப் பகுதியில் மோட்டார் வைத்து தண்ணீரை உறிஞ்சி வருகின்றனர். இதனாலும் தண்ணீரின் அளவு குறைந்து வருகிறது. வைகை அணையை தூர் வாரி தண்ணீரை தேக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், அணையின் நீர்த்தேக்கப் பகுதிகளில் மோட்டார் மூலம் உறிஞ்சப்படும் தண்ணீரைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆண்டுகளில் அணைகளின் நீர்மட்டம்:

வைகை அணை: 2012, ஜன.8 ஆம் தேதி

நீர் மட்டம்: 67.04 அடி, நீர் வரத்து: 1022 கன அடி, நீர் வெளியேற்றம்: 360 கன அடி 2014, ஜன. 8ம் தேதி: நீர் மட்டம்: 40.78 அடி, நீர் வரத்து: இல்லை, நீர் வெளியேற்றம்: 60 கன அடி

முல்லை பெரியாறு: 2012, ஜன.8ஆம் தேதி நீர் மட்டம்: 122.80 அடி, நீர் வரத்து: 401 கன அடி, நீர் வெளியேற்றம்: 1355 கன அடி

2014,ஜன,8ஆம் தேதி: நீர் மட்டம்: 114.10 அடி, நீர் வரத்து: 151 கன அடி, நீர் வெளியேற்றம்: 344 கன அடி.

இது குறித்து வைகை அணை பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியது: அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்யாததால் நீர் வரத்து குறைந்துள்ளது. இனிவரும் காலங்களில் மழை பெய்தால் மட்டுமே கோடை காலங்களில் குடிநீர் தட்டுப்பாட்டை சமாளிக்கலாம். இல்லையேல் குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும் நிலை வரலாம் என்றனர்.

### வெல்லம் தயாரிக்கும் பணி மும்முரம்

விருதுநகர் மாவட்டப் பகுதிகளில் வெல்லம் தயாரிப்பு பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

விருதுநகர் மாவட்டப் பகுதிகளில் ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், விருதுநகர், நடையனேரி உள்ளிட்ட மேற்கு மலைத் தொடர்ச்சி அடிவாரப் பகுதியில் ஆலைக் கரும்பு பயிரிடுவது வழக்கம். அதேபோல், தற்போதும் 5 ஆயிரம் ஹெக்டேரில் கரும்பு பயிரிட்டுள்ளனர். ஆனால், சர்க்கரை ஆலையில் கரும்புக்கு போதிய விலை கிடைக்க வில்லையாம். எனவே கரும்பை ஆலைகளுக்கு அனுப்பாமல், வேலையாள்கள் மூலம் அரைத்து வெல்லம் தயாரித்து கேரளா மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பி வருகின்றனர்.

ஏற்கனவே கண்மாய் பாசனத்தையும், கிணற்றுப் பாசனத்தையும் நம்பி விவசாயிகள் கரும்பு பயிரிட்டிருந்தனர். ஆனால், போதுமான மழையில்லாததால் எதிர்பார்த்த அளவுக்கு கரும்பு சாகுபடி இல்லை. அதே நேரத்தில் விலையும் எதிர்பார்த்த அளவிற்கு கிடைக்காத நிலையே உள்ளது. இப்பயிர் 10 மாதங்களில் அறுவடை செய்யப்படும் நிலையில், தண்ணீர் பற்றாக்குறையால் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக 7,8 மாதங்களிலேயே கரும்பு அறுவடை செய்யப்படுகிறது.

ஒரு ஏக்கரில் பயிர் சாகுபடி செய்வதற்கு ரூ.30 ஆயிரம் வரையில் செலவாகிறதாம். அதேபோல், கரும்பு வெல்லம் காய்ச்சி உற்பத்தி செய்வதற்கும், பணியாளர்களை பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை மற்றும் கரட்டூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அழைத்து வருவதற்கும் ரூ.30 ஆயிரம் வரையில் செலவாகிறது என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் வெல்லம் தயாரிப்பதற்கான செலவும் அதிகரித்துள்ளதாம். இந்நிலையில் கடந்த ஆண்டை விட நிகழாண்டில் விலையும் குறைந்துள்ளதாக வெல்லம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து விருதுநகர் மாவட்ட விவசாயிகள் சங்கத்தின் செயலர் ராமசாமிராஜா கூறுகையில், கரும்பு வெட்டு மற்றும் கரும்புச் சாறு அரவைக்கு ரூ.80 கூலியாகவும், அதை காய்ச்சுவதற்கு கூலியாக ரூ.150 முதல் ரூ.180 வரையில் வழங்கப்படுகிறது.

இப்பணியில் குறைந்தது 6 முதல் 8 பேர் வரையில் ஈடுபடுவார்கள். ஒரு நாளுக்கு 7 உலைகள் வைக்கப்படுகின்றன. ஒரு உலைக்கு 80 கிலோ வெல்லம் என்ற வகையில் 5 குவிண்டால் முதல் 6 குவிண்டால் வரையில் உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த ஆயுத பூஜை, தீபாவளி திருநாளின் போது ஒரு குவிண்டால் ரூ.4200-க்கு விற்பனையானது.

தற்போது, ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம் ஆகிய பகுதி வியாபாரிகள் ரூ.3500 முதல் ரூ.3400 வரையில் வாங்குகின்றனர்.

பொங்கல் விழாவையொட்டி விலை குறைவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே விவசாயிகள் நஷ்டமடைவதை காக்கும் வகையில் கூட்டுறவு நியாய விலைக்கடைகளின் மூலம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும் என ராமசாமிராஜா கோரிக்கையும் விடுத்தார்.

### பெருந்துறையில் உலர்தீவனக் கிடங்கு தொடக்கம்

பெருந்துறை கால்நடை மருத்துவமனையில், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், உலர்தீவனக் கிடங்கு தொடக்க விழா மற்றும் மானிய விலையில் உலர்தீவனம் வழங்கும் விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் வே.க.சண்முகம் தலைமை வகித்தார். சுற்றுச்சூழல் துறை அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் கால்நடை வளர்ப்போருக்கு மானிய விலையில் உலர்தீவனம் பெறுவதற்குரிய அடையாள அட்டைகளை வழங்கி, மானிய விலையில் உலர்தீவனத்தை வழங்கினார். அவர் பேசியதாவது:

தமிழக முதலமைச்சர் வறட்சிக் காலத்தில் தீவன பற்றாக்குறையைப் போக்கி பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, கால்நடைகளுக்கு வறட்சிக் காலத்தில் உலர்தீவனம் கிடைக்க வழிவகை செய்யும் வகையில் உலர்தீவன கிடங்கு திட்டத்தைச் செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்.

மாநிலம் முழுவதிலும் இத்திட்டத்திற்காக, ரூ. 12. 50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்திற்கு, ரூ. 50 லட்சம் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பெருந்துறை, பவானி, நம்பியூர், பொலவக்காளிபாளையம், எழுமாத்தூர் ஆகிய 5 இடங்களில் உலர்தீவனக் கிடங்குகள் அமைக்கப்பட உள்ளன.

இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படும். ஒரு கிலோ உலர்தீவனம் (வைக்கோல்), ரூ. 2-க்கு வழங்கப்படும். ஒரு கால்நடைக்கு நாள் ஒன்றுக்கு 3 கிலோ வீதம் ஒரு வாரத்திற்கு 21 கிலோ என கணக்கிடப்படும்.

அதிக பட்சமாக, 5 கால்நடைகளுக்கு 105 கிலோ உலர்தீவனம் கிலோ ரூ. 2 வீதம் மானிய விலையில் கால்நடை வளர்ப்போர்களுக்கு வழங்கப்படும்.

ஒவ்வொரு உலர்தீவன விற்பனை மையத்திற்கும், ரூ. 10 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இத்தொகை மூலம் உலர்தீவனம் கொள்முதல் செய்யப்பட்டு, உலர்தீவனக் கிடங்குகளில் இருப்பு வைக்கப்படும்.

கால்நடை வளர்ப்போரின் தேவைக்கேற்ப விற்பனை செய்யப்பட உள்ளது என்றார். பூவம்பாளையம், பெரிய வேட்டுவபாளையம், புதுப்பாளையம், ஈங்கூர், தோப்புப்பாளையம், நாமக்கல்பாளையம், பெருந்துறை, கடப்பமடை, சூரியம்பாளையம் காஞ்சிக்கோயில் ஆகிய பகுதிகளைச் சார்ந்த கால்நடை வளர்ப்போர் 38 பேருக்கு மானிய விலையில் உலர்தீவனங்களை அமைச்சர் வழங்கினார். விழாவில் மாவட்ட ஊராட்சித் தலைவர் எஸ்.ஆர்.செல்வம், பெருந்துறை ஒன்றியத் தலைவர் எஸ். பெரியசாமி, கால்நடை பராமரிப்பு துணை மண்டல இணை இயக்குநர் டாக்டர் பிரகாசம், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

### பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 46.59 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 379 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 400 கனஅடி நீர் தண்ணீர் திறக்கப்பட்டது. வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.6 டி.எம்.சி.

## கறவை மாடுகள் பராமரிப்புப் பயிற்சி

நல்லம்பள்ளி வட்டாரத்துக்குள்பட்ட பூச்செட்டிஹள்ளியில் "அட்மா' திட்டத்தின் கீழ், கறவை மாடுகளில் பால் உற்பத்தியை அதிகரித்தல், கறவை மாடுகள் பராமரிப்பு தொடர்பான பண்ணைப் பள்ளி பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குநர் பெ.பாஸ்கர் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் ஆர்.அண்ணாதுரை முன்னிலை வகித்தார். கறவை மாடுகளில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் இடுபொருள்கள் அளிக்கப்பட்டன. இண்டூர் வேளாண் துணை அலுவலர் ஆர்.சேகரன், உதவி வேளாண்மை அலுவலர்கள் ஏ.அருள், ஜி.ரவிசங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கோடைபருவ சாகுபடி முனைப்பு இயக்கம்

பொன்னமராவதி அருகே உள்ள கண்டியாநத்தம் ஊராட்சியில் வேளாண் துறை சார்பில் கோடைபருவத்தில் பயறு வகை பயிர்களின் சாகுபடியை அதிகரிப்பதற்கான முன்பருவ முனைப்பு இயக்கம் வியாழக்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு முழுவதும் வரும் கோடை பருவத்தில் பயறுவகை பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகப்படுத்தி பயறு விளைச்சலை பெருக்கவேண்டும் என தமிழக அரசின் வேளாண்மை துறை மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக நடைபெற்ற முனைப்பு இயக்கத்திற்கு வேளாண்மை உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் தலைமை வகித்து பயறு வகை பயிர்களின் முக்கியத்துவம் மற்றும் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார். கண்டியாநத்தம் ஊராட்சித் தலைவர் ப. முருகேசன் முன்னிலை வகித்தார். தொடர்ந்து, பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து வேளாண்மை அலுவலர் ரமேஷ், பயறு வகை பயிர்களின் வகைகள் குறித்து துணை வேளாண்மை அலுவலர் எலிசபெத்ராணி ஆகியோர் விளக்கினர்.

### விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் ஜன. 24-ம் தேதிக்கு ஒத்திவைப்பு

விழுப்புரம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற இருந்த விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம், வரும் ஜனவரி

24-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இது குறித்து ஆட்சியர் வா.சம்பத் வெளியிட்ட அறிக்கை:

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜனவரி மாதத்தின் மூன்றாவது வெள்ளிக்கிழமையான, 17-ம் தேதி காலை நடைபெற இருந்த விவசாயிகள் குறைதீர்ப்புக் கூட்டம் நிர்வாக காரணங்களால் ஒத்திவைக்கப்படுகிறது. இக் கூட்டம் வரும் நான்காவது வெள்ளிக்கிழமையான வரும் ஜனவரி

24-ம் தேதி நடைபெறும்.

### பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.5 உயர்த்த கோரி ஆர்ப்பாட்டம்

பால் கொள்முதல் விலையை ரூ.5 உயர்த்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கிராமப்புறத் தொழிலாளர் இயக்கம் சார்பில் புதுவையில் வெள்ளிக்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுவை வில்லியனூர் கால்நடை மருத்துவமனை அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட அமைப்பாளர் ஆர்.வி.லெனின் தலைமைத் தாங்கினார். சங்க நிர்வாகிகள் சுப்பிரமணியன், நாகம்மாள் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) மாவட்டச் செயலாளர் கோ. பழனி, கிராமப்புறத் தொழிலாளர் இயக்க துணை அமைப்பாளர் பி.முருகன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

பால் உற்பத்தியாளர்களுக்கு, அரசு கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ.5 உயர்த்த வேண்டும், கால்நடை மருத்துவமனைகளில் உயிர்க்காக்கும் மருந்துகள் தடையின்றி வழங்க வேண்டும், 24 மணி நேர கால்நடை மருத்துவமனைகளை நிறுவ வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 2020ல் கடல் பொருள் ஏற்றுமதி இரட்டிப்பாகும்: மத்திய வர்த்தக அமைச்சர் நம்பிக்கை

சென்னை: "பல்வேறு சிக்கல்களுக்கு தீர்வு காணப்பட்டு, கடல் பொருள் ஏற்றுமதியை அதிகரிக்க, எல்லா முயற்சிகளும் எடுக்கப்படும். 2020ல், கடல் பொருள் ஏற்றுமதி இரட்டிப்பாகும்," என, மத்திய வர்த்தக அமைச்சர், ஆனந்த் சர்மா நம்பிக்கை தெரிவித்தார்.

கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையமும், கடல் பொருள் ஏற்றுமதியாளர் சங்கமும் இணைந்து, சென்னை நந்தம்பாக்கத்தில் நடத்தும், மூன்று நாள், சர்வதேச கடல் பொருள் ஏற்றுமதி கண்காட்சி, நேற்று துவங்கியது. மத்திய அமைச்சர், ஆனந்த் சர்மா, கண்காட்சியைத் துவக்கி வைத்து பேசியதாவது: கடல் உணவு ஏற்றுமதியில், பல்வேறு பிரச்னைகள் உள்ளதாக தெரிகிறது. வெளிநாடுகளை போல், நம் நாட்டின் மீன் வளம், கடல் பொருள் ஏற்றுமதி, ஒரே துறையின் கீழ் இல்லை. இதனால் சில சிக்கல்கள் உள்ளன. ஜப்பான் உள்ளிட்ட சில வெளிநாடுகளில், தரக் கட்டுப்பாடு கடுமையாக்கப்பட்டு உள்ளது. ஜப்பான் அரசுடன், பேச்சு நடத்தப்பட்டுள்ளது. இதில், சில தளர்வுகள் ஏற்படும் நல்ல சூழல் வந்துள்ளது. மற்ற நாடுகளிலும் உள்ள சிக்கல்கள் தீர்க்கப்பட்டு, ஏற்றுமதியை அதிகரிக்க, எல்லா முயற்சிகளையும் அரசு எடுக்கும். 2020ல், நாட்டின் கடல் பொருள் ஏற்றுமதி இரட்டிப்பாகும். இவ்வாறு, அவர் பேசினார்.

## 15 கிலோ கூரல் மீன் விலை ரூ.24 ஆயிரம்; பீர் தயாரிக்க வெளிநாடுகளில் கிராக்கி: உண்மை விலை இன்னும் அதிகம்



ராமேஸ்வரம்: பாம்பன் மீனவர் வலையில் அரிய வகையான கூரல் மீன் ஒன்று சிக்கியது. 15 கிலோ எடை கொண்ட இது 24 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது.

பீர் சுத்திகரிக்க பயன்படுவதால், வெளிநாடுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

இந்திய பெருங்கடலில் 2200 மீன் இனங்கள் உள்ளன. இதில் திமிங்கலம், சுறா, இறால், நண்டு, கணவாய், சீலா, வாவல், பாரை உள்ளிட்ட 100க்கும் குறைவான மீன் வகைகள் தான் நமக்கு தெரியும். ஆனால் ஆழ்கடலில் உப்புதன்மை குறைந்த நீரில் வாழ்வது அரிய இனமான 'கூரல்' மீன். அவ்வளவு எளிதாக வலையில் சிக்காது. மீறி டன் கணக்கில் வலையில் சிக்கினால், அப்படகு உரிமையாளர் கோடீஸ்வரர் தான். பாம்பன் கிறிஸ்து என்பரவது படகில், 15 கிலோ எடை கொண்ட கூரல் மீன் ஒன்று சிக்கியது. இது பெண் மீன் என்பதை கண்டுபிடித்த, பாம்பன் மீன் வியாபாரி ஒரு கிலோ 1600 வீதம் 24 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கினார். இந்த மீன் 25 கிலோ எடை வரை வளரும் என, மீனவர்கள் தெரிவித்தனர்.

## நெல்லுக்குப் போதிய விலை இல்லாததால் அறுவடை... நேரடி கொள்முதல் நிலையம் திறக்காததால் விவசாயிகள் அதிருப்தி

சிதம்பரம் :டெல்டா பகுதியில் சம்பா சாகுபடி நெல் அறுவடை துவங்கிய நிலையில் நெல்லுக்குப் போதிய விலை இல்லாததால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

கடலூர் மாவட்ட டெல்டா பகுதியில் ஒரு போக சம்பா சாகுபடிக்குக் கூட பருவ மழை பொய்யாததால் ஆகஸ்ட் மாத இறுதியில் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டது. சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோவில் டெல்டா பகுதியில் ஒரு

லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்யப்பட்டது.பருவ மழை இல்லாததால் வறட்சி ஏற்பட்டு இந்த ஆண்டு நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட பயிர்கள் கருகியது. மீண்டும் ஏர் ஓட்டி, விலைக்கு நாற்று நட்டு சாகுபடி செய்தனர். இதனால் இந்த ஆண்டு டெல்டா விவசாயிகளுக்குச் சாகுபடி செலவுகள் இரு மடங்கு உயர்ந்தது.பருவ மழை பாதிப்பால் சம்பா சாகுபடியில் அதிக களைச் செடிகள், பூச்சி தாக்குதல் ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். மேலும் விவசாய பணிக்கு ஆட்கள் பற்றாக்குறையால் விவசாய வேலைக்கு அதிக சம்பளம் கொடுக்கவேண்டிய நிலை, களைக்கொல்லி, உரம், பூச்சி மருந்து என அதிக அளவு செலவு செய்து சம்பா சாகுபடியை காப்பாற்ற வேண்டிய கட்டாயத்திற்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர்.காட்டுமன்னார்கோவில் டெல்டா பகுதியில் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் நேரடி நெல் விதைப்பு செய்த விவசாயிகள், தற்போது அறுவடை துவங்கி இரு வாரங்களாக விவசாயிகள் நெல் கண்டுமுதல் செய்து வருகின்றனர்.இந்த நெல் மகசூல் சராசரியாக ஏக்கர் ஒன்றுக்கு 30 மூட்டை வீதம் கிடைக்கிறது. இது விவசாயிகள் செய்த செலவுத் தொகை மட்டுமே கிடைக்கும் நிலையில் உள்ளது. நெல்லுக்குப் போதிய விலை இல்லாததால் டெல்டா விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கடந்த இரு வாரங்களுக்கு முன் அறுவடைசெய்யப்பட்ட ப்பி.பி.டி நெல் மூட்டை 1,000 ரூபா#க்கு விலைக்கு வாங்கப்பட்டது. விலை படிப்படியாக குறைந்து தற்போது 950 ரூபா#க்கு வியாபாரிகள் வாங்குகின்றனர். நெல் விலை மேலும் குறையும் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.நெல்லுக்குப் போதிய விலை இல்லாததால் விவசாயிகள் அறுவடைக்கு தயாராக உள்ள நிலங்களிலும் அறுவடை செய்ய தயங்கி வருகின்றனர். டெல்டா பகுதியில் அரசு நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்க கால தாமதப்படுத்துவதால், தனியார் நெல் வியாபாரிகள் நெல் விலையை அடி மாட்டு விலைக்கு கேட்டு பேரம் பேசு கின்றனர். தனியார் வியாபாரிகளின் செயல்பாட் டால் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

## கரும்பு விதைப்புக்கான சாகுபடி பணி... கண்டமங்கலம் விவசாயிகள் ஆர்வம்

கண்டமங்கலம்: கண்டமங்கலம் பகுதி விவசாயிகள் கரும்பு விதைப்புக்கான சாகுபடியில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். ஒரு டன் விதைக்கரனை கரும்புகள், 2,250 ரூபாய் என விற்பனை செய்யப்படுகிறது.

கண்டமங்கலம் வட்டாரத்தில் உள்ள 54 கிராமங்களில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்து வருகின்றனர். இந்தாண்டு கண்டமங்கலம் பகுதியில் 17 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.கண்டமங்கலம் வட்டாரத்தில் 23 கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் புதுச்சேரி அரியூரில் உள்ள இ.ஐ.டி., பாரி தனியார் சர்க்கரை ஆலைக்கும், 22 கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் சர்க்கரை ஆலைக்கும், 9 கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் லிங்காரெட்டிப்பாளையம் புதுச்சேரி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும் கரும்புகளை வெட்டி அனுப்பி வருகின்றனர்.இப்பகுதியில் சி.ஓ.சி-86034 மற்றும் 11101 ரக கரும்புகள் அதிகளவு சாகுபடிசெய்யப்பட்டு, அனைத்து ஆலைகளிலும் இந்தாண்டுக்கான அரவை துவங்கி <உள்ளது. தற்போது விவசாயிகள் சாகுபடி செய்துள்ள கரும்புகளை அறுவடை செய்து ஆலைக்கு சப்ளை செய்து வருகின்றனர்.சர்க்கரை ஆலைகள் மூலம் கரும்பு விதைக்கரனைக்கு பரிந்துரை செய்யப்படும் கரும்பு ரகங்களை, விவசாயிகள் பயிரிட்டு 6 மாதங்களில் விதைக் கரனைகளாக வெட்டி விற்பனை செய்து வருகின்றனர்.கரும்பு நடவுக்கு சோலையுடன் வெட்டப்படும் கரும்புகள் கத்தைகளாக கட்டப்பட்டு, டிராக்டர் உள்ளிட்ட வாகனங்களில் கொண்டு செல்லப்படுகிறது. இதனை கம்ப்யூட்டர் எடை மேடையில், எடையை அளவிட்டு விற்பனை செய்யப்படுகிறது.விதைக்கரனைக்கு வெட்டப்படும் ஒரு டன் கரும்பு, 2,250 ரூபாய் என விற்பனை செய்யப்படுகிறது. விதைக் கரனைக்கு வெட்டி அனுப்பப்படுகின்ற கரும்புகளில், டன் ஒன்றுக்கு 10 சதவீதம் (ஒரு டன்னுக்கு 100 கிலோ) கழிவு செய்யப்படுகிறது.ஒரு ஏக்கருக்கு (சோலையுடன் கூடிய) 4 டன் கரும்பு அல்லது 2 பருவுள்ள 30 ஆயிரம் விதைக் கரனைகள் தேவைப்படுகிறது.

## விவசாயிகள் குறைகேட்பு24ம் தேதிக்கு ஒத்தி வைப்பு

விழுப்புரம்:மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் வரும் 24ம் தேதிக்கு மாற்றப் பட்டுள்ளது.இது குறித்து கலெக்டர் சம்பத் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 17ம் தேதி விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் சில நிர்வாக காரணங்களால், 17ம் தேதி நடப்பதாக இருந்த கூட்டம் வரும் 24ம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது.விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் வரும் 24ம் தேதி கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது கோரிக் கைகளை அளித்து பயன்பெறலாம்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### வெங்காயம் விலை குறைய உச்சநீதிமன்றம் யோசனை



புதுடெல்லி: 'வெங்காயம் சாப்பிடுவதை நிறுத்தினால், அதன் விலை தானாக குறைந்து விடும்' என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. வெங்காயத்தின் விலை அடிக்கடி உயர்ந்து வருகிறது. எனவே, இதன் விற்பனையையும் மற்ற காய்கறிகளின் விற்பனையையும் ஒழுங்குமுறை படுத்தும்படி மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரி, உச்ச திமன்றத்தில் பொதுநலன் வழக்கு தொடரப்பட்டது. இது, நீதிபதி சவுகான் தலைமையிலான பெஞ்ச் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. அதை விசாரித்த நீதிபதி, 'இதுபோன்ற பொதுநலன் வழக்குகளை தொடர்ந்து, நீதிமன்றத்தின் சுமையை அதிகரிக்க வேண்டாம். இந்த மனுவை விசாரணைக்கு ஏற்க முடியாது. வெங்காயம் சாப்பிடுவதை நிறுத்தினால், அதன் விலையும் தானாக குறைந்து விடும்' என்று கூறி, மனுவை தள்ளுபடி செய்தார்.

**பாசன பிரச்னைக்கு தீர்வு காண சிறப்பு கூட்டம் நடத்தாதது ஏன்? குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கேள்வி**

மன்னார்குடி : பாசன பிரச்னைக்கு தீர்வு காண பொதுப்பணித்துறை அதிகாரிகள், விவசாயிகள் பங்கேற்கும் சிறப்பு கூட்டங் களை 2 ஆண்டாக நடத்தாதது ஏன் என்று மன்னார்குடியில் நடந்த குறை தீர் கூட்டத்தில் விவசாயிகள் கேள்வி எழுப்பினர். மன்னார்குடி ஆர்டிஓ அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது. ஆர்டிஓ சுப்பு தலைமை வகித்தார்.
இதில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலக்குழு உறுப்பினர் பி.ஆர்.பாண்டி யன் பேசியது: திருவாரூர் மாவட்டத்தில் ஆறுகளின் கட்டமைப்புகள் முற்றிலும் வலுவிழந்துள்ளது. 2 ஆண்டுகளுக்கு முன்புவரை கலெக்டர் முன்னிலையில் பொதுப்பணித்துறை அதிகாரிகள், விவசாயிகளை அழைத்து சிறப்பு கூட்டம் நடத்தி பாசன பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது குறித்து விவாதிப்பார்கள். அதன் மூலம் பலபிரச்னைகள் தீர்க்கப்பட்டு வந்தது. தற்போது இந்த சிற ப்பு கூட்டங்கள் நடத்தப்படவில்லை. இரண்டு துறை அதிகாரிகளிடத்திலும் இணக்கமான சூழல் இல் லாத காரணத்தால் இந்த கூட்டம் நடத்தப்படுவ தில்லை என தகவல்கள் வருகின்றன. இதனால் விவசாயிகள்தான் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். உதாரணமாக நடப்பு சம்பா பருவத்திற்கு ஆறுகள் பள்ளமாகவும், பாசனபகுதி மேடாகவும் பல இடங்களில் இருப்பதால் கடைமடை வரை தண்ணீர் பாயவில்லை. கோரையாறு பாசனப்பகுதியில் நல்லூர், வாட்டார், பைங்காட்டூர், அக்கரை கோட்டகம், அரிச்சந்திரா ஆறு பாசனப்பகுதியில் விக்கிரபாண்டியம், ஆலாத்தூர் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களிலும், முள்ளி ஆறு பாசனப்பகுதியில் கோட் டூர், ஆதிச்சபுரம், உள்பட அதை சார்ந்த கிராமங்களிலும் தண்ணீர் பாயாமல்போய்விட்டது.
தண்ணீர் பற்றாக்குறையால் சூறை நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து

இதே நிலை நீடிக்குமானால்  அடுத்த ஆண்டு சாகுபடியும் கேள்விக்குறியாகிவிடும். எனவே விவசாயிகளின் கோரிக்கைகளை இரண்டு துறை அதிகாரிகளும் கேட்பதற்கு சிறப்பு கூட்டத்தை நடத்தி இங்குள்ள பிரச்னைகளை அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்றார்.

வாட்டார் சாமிநாதன், கோவிந்தராஜன், முருகே சன்  ஆகியோர் பேசியது, பைங்காட்டூர் பொன்னுக்கு முண்டான் ஆற்றில் வாட் டார், செல்லத்தூர், நல்லூர் உள்பட பல கிராமங்களில்  தண்ணீர் இல்லாமல் சூறை நோய் பாதித்துள்ளது.

இதற்கு முக்கிய காரணம் பொதுப்பணித்துறை தண் ணீர் கொண்டுவந்து சேர்ப்பதில் அக்கறையில்லாமல் செயல்பட்டது தான்.  முறைவைத்து தண் ணீர் பாய்ச்சும்போது கிளை வாய்க்கால்களை பார்வையிட்டு தண்ணீர் சென்றடைந்துள்ளதா  என உறுதிப்படுத்தாமல் சட்ரஸ் களை மூடி விடுகின்றனர். வரும் ஆண்டுகளில்  மேற் கன்ட கிராமங்களில் விவ சாயம் செய்யலாமா  வேண் டாமா என்பதை பொதுப்பணித்துறைதான் உத்தரவாதமாக சொல்ல வேண்டும் என்றனர். காங்கிரஸ் விவசாய பிரிவு நெடுவை ராஜதுரை, திருத்துறைப்பூண்டி ராமச்சந்திரன் மற்றும் விவசாயிகள் பேசுகையில், 2012-13ம் ஆண்டு பயிர்இன்சூரனஸ் தொகையை விவசாயிகளின் வங்கி கணக்கில் பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக வரவு வைக்கவேண்டும்.  நெற்பழ நோய் தாக்குதலுக்கு உள்ளாகி விவசாயிகள் கொண்டுவரும் நெல்லை நுகர்பொ ருள் வாணிபக்கழகத்தினர் அதிக கெடுபிடி காட்டாமல் கொள்முதல் செய்ய வேண் டும். கடுமை யாக பாதித்துள்ள விவசாயிகளை கணக்கெடுப்பு செய்து அரசுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றனர்.   கோரையாறு உதவிசெயற்பொறியாளர் பேசுகை யில், விவசாயிகள் கூறிய பாசன பிரச்னை களை காரையாறு பகுதியில் போக்குவதற்கு ரூ. 3கோடி யில் எஸ்டிமேட் அரசுக்கு அனுப்பட்டுள்ளது. ஏதாவது நிதியை பெற்று செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**கொடைக்கானலில் பனி பொழிவு அதிகரிப்பு பூண்டு விவசாயம் பாதிக்கும் அபாயம்**

கொடைக்கானல், : கொடைக்கானல் பகுதியில் கடந்த 2 நாட்களாக பனி பொழிவு அதிகரித்து காண ப்படுகிறது. இதனால், கே ரட் சாகுபடிக்கு நன்மையும், பூண்டு சாகுபடியில் பாதி ப்பும் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கருத்து தெரி வித்து உள்ளனர்.

கொடைக்கானல் மேல் மலைப் பகுதியில் 10 ஆயி ரம் ஹெக்டேர் பரப்பில் பூண்டு, கேரட் ஆகிய பயிர் கள் சாகு படி செய்யப்பட்டு ள்ளது. இந்த ஆண்டு தென் மேற்கு மற்றும் வட கிழக்குப் பருவமழை போதுமான அளவு பெய்யவில்லை. அவ்வப்போது பெய்த குறைந்த அளவு மழையை நம்பி விவசாயிகள் சாகுபடி பணி செய்து வந்தனர்.

தற்போது கேரட் அறுவடைக்குத் தயார் நிலையில் உள்ளது. இந்த நிலையில், கடந்த 2 நாட்களாக கொடைக்கானல் பகுதியில் பனி பொழிவு அதிகரித்து காணப்படுகிறது. பனி கேர ட்டுக்கு பாலீஸ் கொடுக்கும். இதனால், கேரட்டுக்கு நல்ல விலை கிடைக்க வாய் ப்பு உள்ளது. பல ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் நடவு செய்யப்பட்டுள்ள பூண்டு 2 மாதங்களில் அறுவடை செய்யும் நிலையில் உள்ளது.

பனி பொழிவு அதிகம் இருப்பதால், பூண்டுச் செடி யில் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. கேரட் விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளித்துள்ள பனி, பூண்டு விவசாயிகளுக்கு சோகத் தை ஏற்படுத்தி உள்ளது.

கொடைக்கானல் கீழ் மலைப்பகுதியில் 20 ஆயி ரம் ஹெக்டேரில் காபி, வாழை பயிர் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. பனி மூட் டத்தால் வாழைக்கு பாதிப்பில்லை. ஆனால், காபி செடிகளில் இலை உதிர்ந்து வருகிறது. காய் பிடிக்கும் தன்மை குறையும் என கூறப்படுகிறது.

மிளகு, சவ்சவ், ஆரஞ்சு போன்றவற்றிற்கு பாதிப்பு இருக்காது. தொடர்ந்து பனி பொழிவு ஏற்பட்டால், அனைத்துப் பயிர்களும் பாதிக்கப்படும் என விவசாயிகள் கூறியுள்ளனர்.

இது குறித்து தாண்டிக் குடி விவசாயிகள் சங்கத் தலைவர் கோவிந்தசாமி கூறுகையில்,

“கொடைக்கானல் கீழ் மலைப்பகுதியில் ஆண்டுக்கு 1500 மி.மீ மழை பெய்யும். ஆனால், கடந்த ஆண்டு 900 மி.மீ மழை தான் பெய்துள்ளது. மழை அளவு குறைந்துள்ளதால் கீழ்மலைப்பகுதியில் 12 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மட்டுமே பயிர் சாகு படி செய்யப்பட்டு உள்ளது. 8 ஆயிரம் ஹெக் டேர் சாகு படி பாதிக்கப் பட்டு உள் ளது. கடந்த 2 நாட்களாக நிலவும் பனி பொழிவால் கேரட்டுக்கு நல்லது என்றா லும் பூண்டு பயிருக்கு தீமை யை ஏற்படுத்தும்“ என்றார்.

**வாழையில் கூண்வண்டு தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறை விவசாயிகளுக்கு யோசனை**

சேதுபாவாசத்திரம், : வாழையில் கூண்வண்டு தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரிய சாமி வெளியிட்டுள்ள அறிக்கை:

வாழையை தாக்கும் பூச்சிகளில் மிக முக்கியமானது கிழங்குவண்டு, கூண்வண்டு, அசுவினிபூச்சி மற்றும் நூற்புழுவாகும். நோய்களை பொருத்தவரை மிக முக்கியமானது வாடல், இலை புள்ளி நோயாகும். இதில் கிழங்குவண்டு தாக்குதலை கட்டுப்படுத்த 1.3 சத லிண்டேன் குருணை 20 கிராம் அல்லது கார்பரில் 10 சத தூள் 20 கிராம் இவற்றில் ஏதேனும் ஒன்றை மரத்தை சுற்றி மண்ணில் இடவேண்டும். அசுவினி பூச்சி முடிகொத்து நோயை பரப்புகிறது. இதனால் வாழை இலை விரிந்து வளராமல் சிறுத்துப்போய் சுருங்கி கொத்துப்போல் காட்சி தரும். இப்பூச்சியை கட்டுப் படுத்த பாஸ்போமிடான் 1 மி.லி. மருந்து அல்லது மிதைல்டெமெட்டான் 1 மி.லி. மருந்து அல்லது மானோகுரோட்டோபாஸ் 1 மி.லி. மருந்து இவற்றில் ஏதேனும் ஒன்றை ஒரு

லிட்டர் நீரில் கலந்து 3 முறை 21 நாள் இடைவெளியில் தெளிக்க வேண்டும். கூண்வண்டு தாக்கு தலை கட்டுப்படுத்த காய்ந்த சருகுகளை அகற்றி தேவை யற்ற கீழ்கன்றுகளை அகற்றிவிட வேண்டும். வாழை இலை இடுக்குகளில் கார்போபியூரான் 3ஜி மருந்துடன் சமஅளவு மணல் சேர்த்து இட வேண்டும். அல்லது மனோகுரோட்டோபாஸ் 2 மி.லி. மருந்தை 1 லிட்டர் நீரில் கலந்து அரை மி.லி. சோப்பு கரைசலை சேர்த்து தண்டின் மேல் தெளிக்க வேண்டும். நூற்பு புழுவை கட்டுப்படுத்த கார்போபியூரான் 3 ஜி மருந்தை கிழங்கில் தூவி நடுதல் வேண்டும். வாடல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த விதை கன்றுகளில் தோலை சீவியபின் பெவிஸ் டின் கரைசலில் மூழ்கி எடுத்துநட வேண் டும்.

மேலும் வாழை நட்ட 5, 6, 7, 8வது மாதங்களில் பெவிஸ்டின் 2 சத கரை சலை 3 மி.லி. என்ற அளவில் கிழங்கும் தண்டும் சேரும் இடத்தில் 10 செமீ துளை யிட்டு ஊசி மூலம் செலுத்தி கட்டுப்படுத்தலாம். இலைப்புள்ளி நோயை கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட இலைகளை அகற்றி எரித்துவிட வேண்டும். பெவிஸ்டின் ஒரு கிராம் அல்லது காலிக்ஸின் 1 மி.லி. மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து அத்து டன் டீபால், ஒட்டும் திரவம் 5 மிலி சேர்த்து தெளிக்க வேண்டும். இவ் வாறு வாழையில் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தலாம்.

**ரூ76,678 ஏக்கரில் சம்பா சாகுபடி ஏக்கருக்கு ஆயிரம் கிலோ கூடுதல் நெல்**

ஈரோடு, : ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகர் அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீரை கொண்டு கீழ்பவானி பாசனம்,

கொடிவேரி பாசனம் மற்றும் காலிங்கராயன் பாசனத்தின் கீழ் ஆண்டுதோறும் குறுவை மற்றும் சம்பா சாகுபடியின் கீழ் சுமார் 1 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்த 2012ல் ஏற்பட்ட கடும் வறட்சியால் கொடிவேரி பாசனத்தின் கீழ் குறுவை நெல் சாகுபடி மட்டும் நடந்தது. கீழ்பவானி மற்றும் காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்தின் கீழ் நெல் சாகுபடி நடைபெறவில்லை.

இதனால், தமிழக அளவில் டெல்டா மாவட்டங்களுக்கு அடுத்த இடத்தை பெறும் ஈரோடு மாவட்டம் நெல் உற்பத்தியில் மிகவும் பின்தங்கியது. கடந்த 2012ம் ஆண்டு போதிய மழை பெய்யாததால் பாசனம் பெரிதும் பாதித்தது.

இந்நிலையில், 2013ம் ஆண்டு ஓரளவு பெய்த தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையால் பாசனப்பகுதியில் நெல் சாகுபடி அமோகமாக இருந்தது.ஏற்கனவே ஒரு ஆண்டு வரை நெல் சாகுபடி செய்யாததால் கீழ்பவானி, காலிங்கராயன், மேட்டூர் வலதுகரை பாசனப்பகுதியில் குறுவை மற்றும் சம்பா சாகுபடியும், கொடிவேரி பாசனத்தின் தடப்பள்ளி-அரக்கன் கோட்டை பாசனத்திற்குட்பட்ட பகுதிகளில் சம்பா சாகுபடியும் முற்றிலும் பாதிப்படைந்தது. கிட்டத்தட்ட ஒரு ஆண் டாக நிலங்கள் தரிசாக போடப்பட்ட நிலையில் இந்த ஆண்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டதும் விவசாய பணிகளில் விவசாயிகள் மும்முரமாக இறங்கினர்.ஒரு ஆண்டாக தரிசாக போடப்பட்ட

நிலத்தில் விவசாயம் செய் யும் போது எந்தப்பயிரை சாகுபடி செய்தாலும் நல்ல பலனை தரும் என்பது விவசாயிகளின் கணிப்பு.அந்த கணிப்பு இம்முறையும் தப்பவில்லை. ஆம்... வழக்கத்தை விட இம்முறை நெல் விளைச் சல் அமோகமாக உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இம்முறை சம்பா சாகுபடியின் கீழ் தடப்பள்ளி-அரக்கன்கோட்டை பாசனத்தின் கீழ் 13750 ஏக்கரும், மேட்டூர் வலதுகரை பாசனத்தில் 11,250 ஏக்கரும், காலிங்கராயன் பாசனத்தில் 5,000 ஏக்கரும், கீழ்பவானி பாசனத்தில் 46,678 ஏக்கர் என மாவட்டம் முழுவதும் 76,678 ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக வேளாண்துறையின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது, மாவட்டம் முழுவதும் பரவலாக நெல் அறுவடை தீவிரமாக நடைபெற்று வருகிறது. பல இடங்களில் இயந்திரம் மூலமாக நெல் அறுவடை ஆகிறது. முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டு நெல் விளைச் சல் அமோகமாக உள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

நெல் விளைச்சல் குறித்து விவசாயி ஒருவர் கூறுகை யில், வழக்கமாக ஒரு ஏக்கரில் 8 முதல் 10 பொதி நெல் தான் விளையும். ஆனால், ஒரு ஆண்டாக தரிசாக இருந்த நிலத்தில் நெல் சாகுபடி செய்யும் போது விளைச்சல் அமோகமாக உள்ளது. எனவே இந்த ஆண்டு ஒரு ஏக்கரில் குறைந்தபட்சம் 14 பொதி நெல் விளைந்துள்ளது. (ஒரு பொதி என்பது 260 கிலோ எடை). ஏறத்தாழ ஒரு ஏக்கருக்கு 3640 கிலோ நெல் விளைந்துள்ளது. கிட்டத்தட்ட ஏக்கருக்கு ஆயிரம் கிலோ நெல் கூடுதலாக விளைந்துள்ளதுள்ளதால் நடப்பாண்டில் நெல் பயிரிட்ட விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

**ஸ்நெல் நஞ்சை தரிசில் பயறு, உளுந்து வகை பயிர்கள் அதிகப்படுத்த முனைப்பு இயக்கம்**

திருவிடைமருதூர், : திருவிடைமருதூர் வட்டாரத்தில் நெல் நஞ்சை தரிசில் பயறு மற்றும் உளுந்து வகை பயிர்களை பயிர் செய் வதை அதிகப்படுத்த வேளாண்மை துறையால் முனைப்பு இயக்கம் நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் வேப்பத்தூர், 69 சாத்தனூர், மருத்துவகுடி, வில்லியவரம்பல், கோவ னூர், கொத்தங்குடி, திருச் சேறை உள்ளிட்ட பல் வேறு கிராமங்களில் நெல் நஞ்சை தரிசில் பயறு மற்றும் உளுந்துவகை பயிர்கள் சாகுபடி பரப்பை அதிகரிக்கும் வகையில் முனைப்பு இயக்கம் நடத்தப்பட்டது.

நெல் நஞ்சை தரிசில் பயறு மற்றும் உளுந்து சாகுபடி செய்வதின் நோக் கம், இதனால் ஏற்படும் லாபம், தொழில்நுட்பங்கள் குறித்து துறை அலுவலர் தியாகராஜன், துணை வேளாண்மை அலுவலர் அலாவுதீன் ஆகியோர் விளக்கினர்.

நெல் நஞ்சை தரிசில் பயிறு, உளுந்து வகைகளை சாகுபடி செய்வதால் பிரத் யேக உலவு வயல் தயாரிப்பு செலவில்லை, அறுவடைக்கு 5 நாட்களுக்கு முன்னதாக அறு வடை இயந்திரத்தில் டயர் பொருத்திய இயந்திரத்தை பயன்படுத்தாமல் பெல்ட் டைப் இயந்திரத்தை பயன்படுத்துவதால் 5 நாட்களுக்கு முன்னதாக பயிர் செய்யப்பட்ட பயிர்களுக்கு பாதிப்பும் ஏற்ப டாது என்று வேளாண் அதிகாரிகள் எடுத்துரைத்தனர். மேலும் ரைசோபியத்தை பயன்படுத்தினால் விதை நேர்த்தி செய்வதால் பயிர்களின் வேர் முடிச்சுகள் மூலம் தழைச்சத்து கிரகிக்கப்பட்டு மண் ணுக்கு வலத்தை கொடுப்பதால் அடுத்ததாக பயிரிடப்படும் பயிர்களுக்கு நல்லச்சத்து கிடைக்கிறது என்று தெரிவித்தனர். ஏற்பாடுகளை உதவி வேளா ண்மை அலுவலர்கள் பாலமுருகன், சுந்தரேசன், ஜாபர் உசேன், கோபாலகிருஷ்ணன் செய்திருந்தனர். திருசங்கு நன்றி கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நடப்பு பருவத்தில் பருத்தி உற்பத்தி 3.61 கோடி பொதிகளாக இருக்கும்**



மும்பை

நடப்பு 2013–14 பருவத்தில் (அக்டோபர்– செப்டம்பர்) பருத்தி உற்பத்தி 3.61 கோடி பொதிகளாக இருக்கும் என இந்திய பருத்தி கூட்டமைப்பு மதிப்பிட்டுள்ளது. ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தி கொண்டதாகும்.

பருத்தி உற்பத்தியில் குஜராத் மாநிலம் முன்னணியில் உள்ளது. அங்கு 1.25 கோடி பொதிகள் உற்பத்தி செய்யப்படும் என கணிக்கப்பட்டுள்ளது. அடுத்து மகாராஷ்டிரா 70 லட்சம் பொதிகளும், ஆந்திராவில் 65 லட்சம் பொதிகளும், பஞ்சாப், அரியானா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் தலா 55 லட்சம் பொதிகளும், மத்திய பிரதேசம் மற்றும் கர்நாடகாவில் தலா 18 லட்சம் பொதிகளும், தமிழ்நாட்டில் 5 லட்சம் பொதிகளும், ஒடிசாவில் 3 லட்சம் பொதிகளும் உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**சமையல் எண்ணெய் இறக்குமதி மீதான வரி 10 சதவீதமாக உயர்வு**



புதுடெல்லி சமையல் எண்ணெய் இறக்குமதி மீதான வரி 10 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகளின் கோரிக்கைகளை பரிசீலித்த பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு இந்த நடவடிக்கை எடுத்துள்ளது.

## நிறுவனங்கள் வரவேற்பு

அதானி, கார்கில் உள்ளிட்ட பல முன்னணி நிறுவனங்கள் இதனை வரவேற்றுள்ளன. அதே சமயம் இது சில்லறை விற்பனை விலையில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என தெரிவித்துள்ளன. தாவர எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் பீ.வி.மேத்தா இது குறித்து கூறும்போது, ‘‘எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் அல்லது சமையல் எண்ணெய் துறையில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாத அளவிற்கு வரி அதிகரிப்பு மிக மிக குறைவாக உள்ளது’’ என்று தெரிவித்தார். தற்போது இறக்குமதியாகும் கச்சா சமையல் எண்ணெய் மீதான வரி 2.5 சதவீதமாக உள்ளது. சுத்திகரித்த எண்ணெய் மீதான வரிதான் 7.5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் கச்சா எண்ணெய்க்கும், சுத்திகரித்த எண்ணெய்க்கும் இடையிலான இறக்குமதி வரி வித்தியாசம் கணிசமாக இருக்க வேண்டும் என இத்துறையினர் எதிர்பார்க்கின்றனர். அதாவது சுத்திரிகரித்த சமையல் எண்ணெய்க்கு 14.5 சதவீத இறக்குமதி வரி விதிக்க வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கையாக இருந்து வருகிறது. ‘‘உள்நாட்டு எண்ணெய் சுத்திரிகரிப்பு நிறுவனங்களின் உற்பத்தி திறன் பயன்பாடு 30 சதவீதம் குறைந்துள்ளது. இந்த நிலையில் 820 டாலர் விலை கொண்ட ஒரு டன் பாமாயிலுக்கு இறக்குமதி வரியை 2.5 சதவீதம் அதிகரித்துள்ளதால் 20 டாலர் மட்டுமே உயர்ந்து உள்ளது. இதன்படி ஒரு லிட்டருக்கு ரூ.1.50 மட்டுமே விலை அதிகரிக்கும். ஆனால் உண்மையில் இந்த அளவிற்கும் கூட விலை உயராது. ஏனென்றால் நாம் சுத்திகரித்த எண்ணெயை இறக்குமதி செய்வதில்லை. எனவே ஒரு லிட்டர் சுத்திகரித்த பாமாயில் விலை ரூ.60–65 என்ற அளவிலும், ஒரு லிட்டர் சோயா எண்ணெய் விலை ரூ.75–80 என்ற அளவிலும்தான் இருக்கும்’’ என அதானி வில்மர் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி ஆங்ஷு மாலிக் கூறினார். இந்நிறுவனம் பார்ச்சூன் பிராண்டின் கீழ் சமையல் எண்ணெயை விற்பனை செய்து வருகிறது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நெல்லை, குமரி, தூத்துக்குடியில் கடும் மழை: குற்றாலம், திற்பரப்பில் குளிக்கத் தடை



திருநெல்வேலி, தூத்துக் குடி, கன்னியாகுமரி மாவட்ட ங்களில் பரவலாக பெய்த மழையால், குற்றால அருவிக ளில் வியாழக்கிழமை வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

### தொடர் மழை

வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக, திருநெல்வேலி மாவட்டத்தில், தொடர் மழை பெய்து வருகிறது. வியாழக்கிழமையும் மிதமான மழை நீடித்தது. காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக பாபநாசம் அணைப்பகுதியில் 180 மி.மீ. மழை பதிவானது. பிற அணைப்பகுதி, மற்ற இடங்களில் பெய்த மழையளவு (மி.மீட்டரில்): மணிமுத்தாறு - 120, கன்னடியன் அணை - 82, மூலக்கரைப்பட்டி -

82, நம்பியாறு - 81, களக்காடு - 64.8, ராதாபுரம் - 62, அம்பாசமுத்திரம் - 54.2, சேர்வலாறு - 51, சேரன்மகாதேவி - 44, கொடுமுடியாறு - 35, கடனாநதி - 18.6, பாளையங்கோட்டை - 16, திருநெல்வேலி - 5.1, ஆய்குடி - 3.2.

பாபநாசம் அணை நீர்மட்டம் 82.85 அடியிலிருந்து, 88 அடியாக உயர்ந்தது. 4,173 கனஅடி தண்ணீர் வரத்து இருந்தது. மணிமுத்தாறு அணைக்கு 4,077 கனஅடி தண்ணீர் வந்தது. நீர்மட்டம் 70.20 அடியிலிருந்து, 75.20 அடியாக உயர்ந்தது. சேர்வலாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் 8 அடியும், கடனா நீர்மட்டம் 5 அடியும், ராமநதியில் 6 அடியும் உயர்ந்தது.

**குளிக்கத்தடை**

செங்கோட்டை, தென்காசியில் பரவலாக மழை பெய்தது. குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. பிரதான அருவியில் வளைவைத் தாண்டி வெள்ளநீர் விழுந்ததால், சுற்றுலாப் பயணிகள் குளிக்கத் தடை விதிக்கப்பட்டது.

பழைய குற்றால அருவியிலும் குளிக்க தடை விதிக்கப்பட்டிருந்தது. ஐந்தருவியில் அதிகளவில் தண்ணீர் விழுந்தது. ஐயப்ப பக்தர்கள் வருகை அதிகம் இருந்ததால், அருவியில் பாதுகாப்பான இடங்களில் குளிக்க அனுமதிக்கப்பட்டனர்.

**களக்காடு**

களக்காடு பகுதியில் தொடர் மழை காரணமாக அங்குள்ள, நாங்குநேரி கால்வாய், பச்சையாறு மற்றும் உப்பாறு ஆகியவற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால், சிதம்பராபுரம் பகுதியில் பாலத்தை தொட்டபடி வெள்ளநீர் கரைபுரண்டு ஓடி, ஊருக்குள் புகுந்தது. நாங்குநேரி கால்வாயில் திடீர் உடைப்பு ஏற்பட்டதால், களக்காடு புதுத்தெரு, சர்ச் தெரு பகுதிகளில் வெள்ளநீர் புகுந்தது. பொது மக்கள் வீட்டை விட்டு வெளியே வர முடியாத சூழ்நிலை உருவானது. வெள்ளநீரை வடிய வைக்கும் பணியில் களக்காடு பேரூராட்சி நிர்வாகம் ஈடுபட்டது.

## திற்பரப்பு ஆர்ப்பரிப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில், 2வது நாளாக வியாழக்கிழமை சாரல் மழை பெய்தது. மாவட்டத்தில் அதிகபட்சமாக 76.2 மி.மீ. மழை பதிவானது. திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது.

பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் நேற்று காலை 21.35 அடியாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 130 கன அடி தண்ணீர் வருகிறது. பெருஞ்சாணி அணை நீர் மட்டம் 56 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 208 கன அடி தண்ணீர் வருகிறது.மாம்பழத்துறையாறு அணை நிரம்பி வழிவதால், அணையிலிருந்து 16 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணை பொதுப்பணித்துறை அதிகாரிகளின் தொடர் கண்காணிப்பில் இருக்கிறது. கடல் சீற்றம் அதிகமாக உள்ளதால், மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. விசைப்படகுகள்,கட்டுமரங்கள் கடற்கரையில் நிறுத்தப்பட்டன.

பேச்சிப்பாறை 2, பெருஞ்சாணி 8.4, சிற்றாறு 1-ல் 7.4, சிற்றாறு 2-ல் 9.6, ஆரல்வாய்மொழி 38, மாம்பழத்துறையாறு 65, நாகர்கோவில் 51.2, பூதப்பாண்டி 36.2, கன்னிமார் 51.4, பாலமோர் 10.4, மயிலாடி 76.2, கொட்டாரம் 72.4, இரணியல் 27, ஆணைக் கிடங்கு 55, குளச்சல் 46, குருந்தன்கோடு 47.6, அடையாமடை 40, கோழிப்போர்விளை 38, திருவட்டாறு 48 மி.மீ. மழை பதிவானது.

## தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை தொடங்கிய மழை, புதன்கிழமையைத் தொடர்ந்து, வியாழக்கிழமை அதிகாலையும் நீடித்தது. இதனால், மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவித்து, மாவட்ட ஆட்சியர் ம.ரவிக்குமார் உத்தரவிட்டார்.

புயல் எச்சரிக்கை காரணமாக வியாழக்கிழமை மூன்றாவது நாளாக விசைப்படகு மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லவில்லை. 300 விசைப்படகுகள் தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் ஓய்வெடுத்தன.

**விவசாயிகள் மகிழ்ச்சி**

பருவமழை பொய்தத்தால் தூத்துக்குடி மாவட்டத்தில் பயிரிடப்பட்ட உளுந்து, பாசிப்பயறு, மக்காச்சோளம் உள்ளிட்ட மானாவாரி பயிர்கள் கருகத் தொடங்கின. இந்நிலையில் பெய்த இந்த மழை விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்துள்ளது.

## மழை பெய்யும் தருணங்களில்



மழை மனிதர்களுக்காகப் பெய்வதில்லை; மண்ணுக் காகப் பெய்கிறது. யாருக்கோ யாரோ சுமந்து வரும் பூ மாலையை தனக்கானதாய் எண்ணி மகிழும் ஒருவனைப் போல மழைவரும் போதெல்லாம் மனிதர்கள் வானத்தைப் பார்த்து குதூகலிக்கிறார்கள். மழையோ இடையில் எது தடுத்தாலும் விழுந்து, வழுக்கி, சறுக்கி சேரவேண்டிய மண்ணில்எப்படியும் சேர்ந்து விடுகிறது. மண்ணிற்கும் மழைக்கும் பூமியின் முதல் நாளில் இருந்தே காதல் இருந்திருக்கிறது.

சூரியனில் இருந்து பிய்ந்து வந்த நெருப்பு வட்டமாய் தகித்துக்கொண்டிருந்த பூமியை, தந்தையின் அரவணைப்பில் இருக்கும் காதலியை தீராத காதலால் திருடும் காதலனைப் போல, விடாமல் நீர் பொழிந்து திருடிக்கொண்டது மழை. மழை, பூமியை பருவமெய்த வைத்திருக்காவிடில் பூமி மனிதர்களைப் பெற்றிருக்காது.

பேச, எழுதப் பழகும் முன் மனிதன் முதன்முதலில் ஓவியம் வரையத் துவங்கியதுஅடைமழை பெய்த ஒரு அழகிய மாலைவேளையில் தான். கற்களைக் கூராக்கி,மிருகங்களின் கழுத்தைப் பதம் பார்த்துப் பச்சையாய் தின்ற மனிதனுக்குள் ஓவியனை உருவாக்கும் ஆற்றல் மழையைத் தவிர வேறெதற்கும் இருந்திருக்கும் என்பதை நம்புவதற்கில்லை. காதலிகளுக்கு இருந்திருக்கலாம். ஆனால் காதலியை மட்டுமல்ல... காதலையே அடையாளம் காட்டும் பொருளாய் மழைதானே இதுவரைக்கும் இருக்கிறது.காதலுக்கும் மழைக்கும் ஒரு தொடர் புண்டு. மழையில் சொல்லப்பட்ட காதல்கள் நிராகரிக்கப்பட்டதாய் எந்த இலக்கியமும் இதுவரை சொன்னதில்லை, நாமும் கேள்விப்பட்டதில்லை.

காதலிகள் தரும் முத்தங்களைப் போன்றது மழை. அதுவாய் நினைத்தால்தான் பெய்யும்.சில மழைகள் பெய்தடித்து திணறடிப்பதுமுண்டு. சில இன்னும் பெய்யாதா என ஏங்கவைப்பதும் உண்டு.

வெயிலுக்கு எதிரியாய் சொல்லப்பட்டாலும், மழையை எதிரியாய்ப் பெறும் தகுதி வெயிலுக்கு இருப்பதாகச் சொல்லமுடியாது. மழை, ஞானத்தின் மொத்தவிலைக்கடை.மழை சோகமாய் இருக்கும் தருணங் களில் உள்ளுக்குள் இருக்கும் ஞானியை எழுப்பிவிடுகிறது. மரத்தில் விழுந்து, இலையில் வடிந்து, கீழேத் துளித்துளியாய் ஒழுகும் மழையைப் பார்க்கும் ஒவ்வொருவனும் ஒரு நொடியேனும் புத்தனாகிறான். புத்தர் போதிமரத்தடியில் இருந்தபோது மழை பெய்திருக்க வேண்டும். காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்த கதையாக புத்தரின் ஞானத்திற்கு போதி மரம் சொந்தம் கொண்டாடிக்கொண்டிருக்கிறது.

மணலை மட்டுமல்ல, மனதையும் கழுவும் ஆற்றல் மழைக்கு உண்டு. மழை பெய்யும்போது எல்லா மனங்களிலும் பெரும்பாலும் சமாதானமே நிலவுகிறது. ஏதோ நல்லசெயலை செய்யலாமா வேண்டாமா எனக் குழப்பத்தில் நிற்பவர்களை "உடனே செய்" என மழை தலையில் தடவிச் சொல்கிறது. மழையின் சத்தம் எதிர்மறை எண்ணங்களுக்குஒவ்வாததாக இருக்கிறது. ஏதாவதொரு மழை யின் போது எப்போதாவது ஒரு முறை யேனும் கோபம் வந்திருக்கிறதா என

எண்ணிப்பார்த்தால் அப்படி எதுவும் எப்போதும் வந்ததாகத் தெரியவில்லை. மழையின் காரணமாக கெட்டுப்போன வேலைகளால் ஏற்படும் எரிச்சல் கூட மழையை சபிக்கக்கூடிய அளவிற்குக் கடினமானதாய் ஏற்படுவதில்லை. சாக எண்ணி கடைசி மாடிக்குப் போன எத்தனையோ பேர் மழையைப் பார்த்து மனம் மாறியிருக்கலாம். கொலை காரர்களில் எத்தனையோ பேரின் மனங்களைக் கூட கடைசி நேரத்தில் மழை கழுவியிருக்கக்கூடும்.

வரிகளுக்கிடையே படிக்க வைக்கும் அறிவைப் போல, காட்சி களுக்கிடையே பார்க்க வைக்கிறது மழை. சாவு வீடுகள் கூட மழை பெய்யும் தருணங்களில் வெறும் சோகவீடுகளாய்த் தெரியாமல் சாவிற்கும், மனிதர்களுக்குமான உறவை உணர்த்தும் கண்காட்சி அரங்கங்களாகத் தெரிகின்றன. மழையில் நனைந்த சாவுவீட்டில் உதிர்ந்த ரோஜாப்பூக்கள் விட்டுச் செல்லும் வாசம் நாசி வழியாக குடலுக்குள் ஊடுருவும் போது சாவு நமக்கு மிக நெருக்கத்தில் வந்து போகிறது.

கவிஞர் இனத்தின் அதிகாரபூர்வ கடவுளாய் மழை இருக்கிறது. மண்ணிற்கு அடுத்து கவிதைகளுக்கே அவை மிக நெருக்கமாய் இருக்கின்றன. மழை ஆயிரமாயிரம் காலமாய் மண்ணைக் காதலித்தாலும் வழியில் நிற்கின்ற ஒரே காரணத்திற்காக மனிதர்களுக்கும்எவ்வளவோ வழங்கிக் கொண்டிருக்கிறது. மின்கம்பியில் அமர்ந்தபடி நனைந்த தலையைசிலுப்பிக் காயவைக்கும் குருவிகள், உடலைச் சிலுப்பியபடியே ஓரமாய் நடக்கும் தெருநாய்கள், மழையால் உயிர் பெற கடைசியாக ஒருமுறை முயற்சித்து தோற்றுக்கிடக்கும் நனைந்த சருகுகள், திடீரென எட்டிப் பார்க்கும் காளான்கள், தலைக்குப் பிடிப்பதா புத்தகப் பைக்குப் பிடிப்பதா எனத் தெரியாமல் குடையை முன்னும் பின்னுமாய் மாற்றிமாற்றி ஆட்டி இரண்டையுமே நனைத்து நடந்து செல்லும் பள்ளிக் குழந்தைகள்,தாமரை இலையில் மழை பெய்ததைப் போல நீர்த்துளிகள் நிற்கும் அழகியமுகங்களுடன் செல்லும் குமரிகள் என மழையை விட அழகாய் மழை விட்டுச் செல்லும் தடங்கள் ஏராளம். நடப்பை விட தடயங்கள் அழ கானவை என்பதையும் மழையே கற்றுத்தருகிறது. மனிதர்கள் விரும்புவதைப்போல மழை தனி அடையாளங்களை

விரும்புவதில்லை. சாகக்கிடந்த எதோ ஒரு விதை எதேச்சையாகப் பெய்த எதோ ஒரு மழையில் உயிர்பிழைத்து பெரும்

விருட்சமாய் வளர்ந்திருக்கலாம். எந்த விதை எந்தத்துளியில் முளைத்தது என்பது தெரியா தெனினும் ஒவ்வொரு பிரம்மாண்ட விருட்சத்தின்பின்னும் அடையாளம் தெரியாத ஒரு மழையின் துளி இருக்கிறது.

எத்தனையோ மழைகள் லட்சம் வருடங்களாய் பெய்திருக்கின்றன. மாமோத்கள் காலத்தில் பெய்தது, டினோசர்களுக்கும் பெய்தது, இன்று மனிதர்களுக்கும் பெய்கிறது.நாளை எதுவுமே இல்லையென்றாலும் மழை பெய்துகொண்டுதான் இருக்கும். மழையைப் பொறுத்தவரை நாம் மண்ணுடனான அதன் காதலால் ஏற்பட்ட விபத்து. நமது உலகம் அழிந்தாலும் புதிய உலகம் உருவாகும் வரை மழை பெய்யும். ஆனால் நம்மைப்போல வேறு யாராலும் மழையை மனதிற்குள் உணர முடியுமா எனத் தெரியவில்லை.ஆனால் மழை அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாது. அதன் தேவையெல்லாம் மண்ணைச் சேரவேண்டும். மண் இருக்கும் வரை மழை பெய்யும்.